

# முடிவுரை

# முடிவுரை

மிகவும் பழமையான இந்து சமயத்தின் இருகண்கள் போல சைவமும், வைணவமும் விளங்குகின்றன.

அரியும் அரனும் ஒருவரே எனக் காளிதாசர், ஆழ்வார்கள், திருமூலர் கம்பர் போன்றோர் விளக்கியுள்ளனர்.

பரமாத்வான விஷ்ணு இவ்வுலகம் முழுதும் நிறைந்துள்ளான். வைணவத்தின் பெருமையைப் பல நூல்கள் எடுத்துரைக்கின்றன. இந்நூல்கள் திருமாலின் திருக்கோலம், அவனது ஆபரணங்கள் ஆகியவற்றை விவரிக்கின்றன.வைணவனின் குணநலன்கள் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன.

வீடுபேற்றை எய்த சரணாகதித் தத்துவமே உயர்ந்தது. அதற்கான ஒன்பது வழிகள் கூறப்பட்டுள்ளன. திருமாலின் ஐந்து நிலைகளான பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம, அர்ச்சை ஆகியவைகள் ஆழ்வார்கள் பாடல் மூலம் விவரிக்கப்பட்டுள்ளன.

சோழநாடு முதல் திருநாடுவரை உள்ள நூற்றெட்டுத் திவ்விய தேசங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றில் இறைவனின் திருக்கோலங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

திருவரங்கத்தின் வரலாறு விவரிக்கப்பட்டுள்ளது. திருவரங்கம் கோயில் அமைப்பு விவரிக்கப்பட்டுள்ளது. கோயிலின் ஏழு திருச்சுற்றுக்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

திருவரங்கம் பெரியகோயில் நாள் வழிபாட்டிலும், சிறப்பு வழிபாட்டிலும் இசை முக்கியப் பங்கு வகிக்கிறது.

இவ்விழாக்களின் விதி முறைகள் பாஞ்சராத்ர ஆகம நூல்களில் விவரிக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பற்றிய செய்திகள் ஓலைச்சுவடிகள்,

இவ்விழாக்களின் விதி முறைகள் பாஞ்சராத்ர ஆகம நூல்களில் விவரிக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பற்றிய செய்திகள் ஓலைச்சுவடிகள், கோயிலொழுகு, திவ்வியப்பிரபந்தம், கல்வெட்டுக்கள், கி.பி. 1928ஆம் ஆண்டின் ஓராண்டு கோயில் நாட்குறிப்பு, வருட மகோத்சவ கீர்த்தனைகள் மற்றும் இன்றைய நடைமுறை வழக்குகள் ஆகியவற்றின் மூலம் அறியப் படுகிறது.

இக்கோயிலில் இராமானுசர் ஏற்படுத்திய அந்தணர் மற்றும் அந்தணரல்லாத பணியாளர்களின் பணிகள் விவரிக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலில் அர்ச்சகர்கள், அரையர்கள், தேவதாசிகள் மற்றும் இசைக் கலைஞர்களின் தொண்டு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

திருவரங்கத்தில் வாழும் இரு அரையர் குடும்பங்களைப் பற்றிகூறப்பட்டுள்ளது. இவர்களின் இசை மற்றும் நடனப் பயிற்சி பற்றி சொல்லப்பட்டுள்ளது.

அரையர்கள் பாசுரங்களை இயற்பா, இசைப்பா எனவும், நடனத்திற்கான பாசுரங்கள் எனவும் வகைப்படுத்தி உள்ளனர். தவிர ஒவ்வொரு திருவிழாவிலும் பாடப்படும் பாசுரங்கள், அபிநயிக்கப்படும் பாசுரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

தேவரடியாரின் இசை மற்றும் நடனப்பயிற்சி, வாழ்க்கை முறை ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. இவர்கள் பாடி ஆடிய உருப்படிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

நாள் வழிபாட்டு முறையில் ஆறு காலங்களில் நடத்தப்பெறும் வழிபாட்டு முறைகளும் அவற்றில் இசையின் பங்கும் விவரிக்கப்பட்டுள்ளன.

அரங்கனுக்கு ஆண்டு முழுவதும் விழாக்கோலமே. பெருவிழாக் களிலும் மாத விழாக்களிலும் நடைபெறும் நிகழ்ச்சிகள், அவற்றில் இசை, நடனம்,

SAN UNIVERSITY

நாடகம் ஆகியவற்றைப் பற்றிய விவரங்கள் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன.

பெருவிழாக்களில் கொடியேற்றம், பேரிதாடனம், தசசந்திக்கான தேவதைகள் அவற்றுக்குரிய இராகம், தாளம், நிருத்தம் ஆகியன கூறப் பட்டுள்ளன.

இறைவன் எழுந்தருளும் வாகனங்கள், அப்போது பாடப்படும் இராகங்கள், பாடல்கள், பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள் ஆகியவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

விழாக்களில் அரங்கனைத் துதிக்க ஏற்றத்தாழ்வற்று அனைத்து வகுப்பினரும் பங்கேற்கின்றனர். இவ்வமயம் பக்தி வெள்ளத்தில் மூழ்கி கிராம மக்கள் பாடி ஆடிய கிராமியப் பாடல்களும் நாட்டுப்புற கலைகளும் கூறப்பட்டுள்ளன.

தமிழகத்தில் பக்தி இயக்கம் தழைத்தோங்க பெரும் பங்காற்றிய ஆழ்வார்கள் பற்றியும் அவர்கள் தொண்டினையும், அவர்கள் அரங்கன் மீது பாடிய பாசுரங்களைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

ஆழ்வார்கள் என்ற சொல்லுக்கு முன்னோர்கள் எம்பெருமானுடைய மங்கள குணங்களில் ஆழங்கால் படுபவர்கள்' என்று அருளினார்கள்.

ஆழ்வார்களின் காலம் இன்னும் அறுதியிட்டுக்கூற இயலாத ஒன்றாகவே உள்ளது.

நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தின் தொகுப்புமுறை, பாசுரத் தொகை ஆகியன கூறப்பட்டுள்ளன. திவ்வியப் பிரபந்த உரைநூல்கள், தனியன்கள் ஆகியன பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

ஆழ்வார்களின் வாழ்க்கை வரலாறும் அவர்கள் இயற்றிய

பாசுரங்களின் சிறப்பும், அவர்கள் அரங்கன் மீது பாடிய பாடல்களும் கூறப்பட்டுள்ளன.

ஆழ்வார்கள் பன்னிருவரில் மதுரகவியாழ்வார் தவிர ஏனைய பதினோரு ஆழ்வார்களால் திருவரங்கத்தின் மீது பாடப்பட்ட 247 பாக்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

ஆழ்வார்களால் திருவரங்கத்தின் மீது பாடப்பட்ட 247 பாக்கள். திருவரங்கத்தலப்பெருமை, திருவரங்கம் பெரிய கோயிலின் சிறப்பு, அரங்கனின் வடிவழகு, அரங்கனின் குணநலன்கள், திருவரங்கத்தடியார்கள் என வகைப்படுத்தப்பட்டு ஆராயப்பட்டுள்ளன.

திருவரங்கத்தலப்பெருமை என்ற தலைப்பில் திருவரங்கத்தின் நீர் வளத்தையும் நிலவளத்தையும் பற்றிய செய்திகள் ஆழ்வார் பாசுரங்களி லிருந்து எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

இசையாகி நின்ற இறைவனை அடையும் வழிகளுள் தலை சிறந்தது 'நாமசங்கீர்த்தனமே'. இறைவனுக்குச் செய்யபடும் 'உபசாரங்களில்' ஆடலும் பாடலும் முக்கிய இடம் வகிக்கின்றன.

ஆழ்வார்கள் காலத்திற்குப் பின் பலஇயலிசைப்புலவர்கள் கீதம், சப்தம், சுரஜதி, வர்ணம், கீர்த்தனை, பதம், தில்லானா போன்ற பல உருப்படிகளை இயற்றியுள்ளனர். அவற்றுள் அரங்கனைப் பற்றிய உருப்படிகள் தொகுக்கப் பட்டுள்ளன.

நிகமாந்தமகாதேசிகன் இயற்றிய பாடல்களில் அரங்கனின் புராணவரலாறு இடம் பெற்றுள்ளது. பிள்ளைப் பெருமாளய்யங்கார் நான்கு இசைப்பிரபந்தங்களைப் பாடியுள்ளார். இவரது பாடல்களில் சில ம்டங்களில் ஆழ்வார்களின் சொல்லாட்சி காணப்படுகிறது.

கம்பர் கம்பஇராமாயணத்தையும் சீர்காழி அருணச்சலக் கவிராயர்

தனது இராமநாடகக் கீர்த்தனைகளையும் திருவரங்கத்தில் அரங்கேற்றினர்.

கனம் கிருஷ்ணையர் மார்கழிமாத விழாவில்அரங்கனைக்கண்டு களித்து இரு பதங்களை இயற்றியுள்ளார்.

சங்கீத மும்மூர்த்திகளில் தியாராசரும், தீட்சிதரும் ஐந்து கீர்த்தனைகளை அரங்கன் மீது பாடியுள்ளனர்.

மார்க்கதரிசி சேஷையங்கார், ஊத்துக்காடு வெங்கடசுப்பையர், மைசூர் சதாசிவராவ், மைசூர் வாசுதேவாச்சார், தஞ்சை பொன்னையா பிள்ளை, நெரூர் ஸ்ரீனிவாசாச்சார், பாபனாசம் சிவன் ஆகியோரது வாழ்க்கை வரலாறு சுருங்கக் கூறப்பட்டுள்ளது.

மார்க்கதரிசி சேஷையங்கார், ஊத்துக்காடு வெங்கடசுப்பையர், மைசூர் சதாசிவராவ், மைசூர் வாசுதேவாச்சார், தஞ்சை பொன்னையா பிள்ளை, நெரூர் ஸ்ரீனிவாசாச்சார், பாபனாசம் சிவன், ஷாஜி மன்னர், மூலைவீட்டு அரங்கசாமி நட்டுவனார் ஆகியோர் அரங்கனின் மீது பாடிய பாடல்கள் தெடுக்கப்பட்டுத் தொகுத்தளிக்கப் பட்டுள்ளன.

ஒரு சில பாடல்கள் சுர, தாளக்குறிப்புகளுடன் தரப்பட்டுள்ளன.

ஆலையங்கள் கலைகளின் களஞ்சியமாக விளங்குகின்றன. தான் கண்டுணர்ந்து அனுபவித்த வடிவத்தைக சிற்பி கல்லிலும் உலோகத்திலும் படைக்கும்போது அது சிற்பம் எனப் பெயர் பெற்றது.சிற்பத்திற்கு அழகூட்ட ஆடை , அலங்கார, ஒப்பனைகளை மேற்கொண்டான்

திருவரங்கத்தில் அரங்கனுக்கும் நாச்சியாருக்கும் நாள் வழிபாட்டிலும் மாத வழிபாட்டிலும் பெருவிழாநாட்களிலும் செய்யப்படும் ஆடை அலங்காரங்களும், மலர் அலங்காரங்களும் விவரிக்கப்பட்டுள்ளன.

திருவரங்கத்தில் கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும்

கோபுரங்களும், ஒய்சாள, விசயநகர மன்னர்கள் காலத்திய சிற்பங்களும் விளக்கப்பட்டுள்ளன.உலோகத்திருமேனிகள், சுதைச்சிற்பங்கள், தந்தச்சிற்பங்கள் ஓவியங்கள் ஆகியவை விவரிக்கப்பட்டுள்ளன.

திருவரங்கத்தில் வாழ்ந்த, வாழ்கின்ற இசைக்கலைஞர்கள் பற்றி விளக்கப்பட்டுள்ளது.திருவரங்கத்தில் நடந்த, நடைபெறும் இசை நிகழ்ச்சிகள், நாட்டிய நிகழ்ச்சிகள், நடனங்கள், இசைக்கருத்தரங்குகள் ஆகியன பற்றி விவரிக்கப் பட்டுள்ளன.

திருவரங்கம் கோயிலில் பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகள், தற்போது இசைக்கப்படும் தந்திக்கருவிகள், காற்றுக்கருவிகள் ஆகியன விளக்கப்பட்டுள்ளன.

நாட்டியத்திலும், பாஞ்சராத்திர ஆகமத்திலும் காணப்படும் முத்திரைகளும், நாட்டியத்திலும் சிற்பங்களிலும் காணப்படும் கரணங்களும் படங்களுடன் கொடுக்கப்பட்டுள்ளன.

கலைப்பீடமாகத் திகழும் திருவரங்கத்தில் முத்தமிழும் பேணி வளர்க்கப்படுகின்றன. இன்றும் மரபு தவறாது வழிபாடுகள் நிகழ்த்தபபடும் இக்கோயிலில் திருவிழாக்காலங்களிலும் இரவு முழுதும் இசை, நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றதாகத் தெரிகிறது. இசை மரபும், நடன மரபும் பெருமளவு அழிந்து போயுள்ளதை உணர முடிகின்றது. பெரும்பாலான இசைக்கருவிகள் வழக்கிலில்லை. கோயிலில் பணிபுரிவோருக்கு பண்டைய நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியமே இன்றும் தரப்படுகிறது. ஆகவே பெரும்பாலான ஊழியக்காரர்கள் கோயில் பணியை விட்டுவிட்டு மற்ற பணிகளுக்குச் சென்றுவிட்டனர். இந்நிலை மாற அரசும், சமுதாயமும் இறைப்பணியில் ஈடுபட்டுள்ள கலைஞர்களுக்கு ஊக்கமளிக்கவேண்டும்.